# மாதிரி வினாத்தாள்

## கணக்குப் பதிவியல்

## மேல்நிலை இரண்டாமாண்டு

## பிரிவு அ

**(30 x 1 =30)**

நேரம் : 3 மணி　　　　　　　　　　　　　மொத்த மதிப்பெண்கள் 200

**i.** அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

**ii.** அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன.

**I.** கோடிட்ட இடங்களை நிரப்புக:

1. __________ அடக்க விலை அல்லது __________ விலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.

2. வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்குப் பின் மீதமுள்ள கடனாளிகள் __________ என அழைக்கப்படுகின்றனர்.

3. இருப்பாய்வில் வங்கி கடன் ரூ. 5,00,000 க்கு 10% வீதம் (1. 4. 02) வட்டி செலுத்தியது ரூ. 30,000 நிலுவையிலுள்ள வட்டி ____________.

4. நிலை அறிக்கை முறை ___________ முறை எனவும் அழைக்கப்படும்.

5. வரி விதிப்பவர்கள் ______________ முறையை ஏற்றுக்கொள்வதில்லை.

6. காப்பீட்டு முனைம முறையில் ஆண்டுதோறும் தேய்மானம் ____________ ஆகச் செலுத்தப்படுகிறது.

7. இயந்திரத்தின் விற்பனை விலை ரூ. 3,00,000 விற்றதில் ஏற்பட்ட இலாபம் ரூ. 28,000 இயந்திரத்தின் அடக்க விலை ____________.

8. ____________ விகிதங்கள் நிறுவனத்தின் நடப்பு செலுத்துகை திறனை அளவிடுகின்றன.

9. நிகர இலாபத்திற்கும், விற்பனைக்கும் இடையேயான உறவே ____________ எனப்படுகிறது.

10. ________________ ஒரு பயனுள்ள கருவியாக ரொக்கத் திட்டப்பட்டியல் உள்ளது.

11. கூட்டாண்மையின் மிக முக்கிய சிறப்பியல்பு பரஸ்பர ______________ முகமை ஆகும்.

12. நடப்புக் கணக்கின் வரவு இருப்பு, இருப்பு நிலைக்குறிப்பில் ___________ பக்கத்தில் இடம் பெறும்.

13. பகிரப்படாத நட்டம் இருப்புநிலை குறிப்பில் ___________ பக்கத்தில் தோன்றும்.

14. காப்பு முதல் ______________ போது மட்டும் வெளியிடப்படும்.

15. A Ltd. என்ற நிறுமம் பங்கு ஒன்று ரூ.10 வீதம் 60,000 பங்குகள் பொது மக்களால் ஒப்பப்பட்டன. அவை மீது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7 வீதம் அழைக்கப்பட்டது. எனில் அழைக்கப்படாத முதல் __________ ஆகும்.

**II.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

16. கூடியுள்ள கழிவு ______________ ஆகும்.

அ. பொறுப்பு　　　　ஆ. சொத்து　　　　இ. வருமானம்

17. 2004 மார்ச் 31 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 80,500 வாராக் கடன் ரூ. 500 போக்கெழுதப்பட வேண்டும். 5% வீதம் வாரா ஐயகடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ______ ஆகும்.

அ. ரூ. 4,000 ஆ. ரூ. 5,000 இ. ரூ. 2,500

18. முழுமைபெறாத இரட்டைப் பதிவு முறையில் வியாபாரத்தின் முதலினை அறிய தயாரிக்கப்படுவது.

அ. வியாபாரக் கணக்கு ஆ. இலாப அல்லது நட்ட அறிக்கை இ. நிலை அறிக்கை

19. 2004 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் ரூ.20,400. 2005 மார்ச் 31 அன்று கடனாளிகள் ரூ. 33,000 அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் ரூ. 60,800 எனில் அவ்வாண்டின் கடன் விற்பனை ________ ஆகும்.

அ. ரூ. 73,400 ஆ. ரூ. 81,200 இ. ரூ. 48,200

20. விற்பனை விலை, சொத்தின் ஏட்டு மதிப்பைவிட அதிகமாக இருந்தால் அது ஒரு ___________ ஆகும்.

அ. நட்டம் ஆ. வருமானம் இ. இலாபம்

21. ஒரு சொத்தின் அடக்க மதிப்பு ரூ. 1,00,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் ஆண்டுக்கு 10% வீதம் நீக்கப்பட்டால் இரண்டாம் ஆண்டின் இறுதியில் அச்சொத்தின் ஏட்டு மதிப்பு __________ ஆகும்.

அ. ரூ. 90,000 ஆ. ரூ. 80,000 இ. ரூ. 70,000

22. நீர்மைப் பொறுப்புகள் என்றால் __________.

அ. நடப்புப் பொறுப்புகள் ஆ. நடப்பு பொறுப்புகள் - வங்கி மேல்வரைப் பற்று

இ. நடப்பு பொறுப்புகள் + வங்கி மேல்வரைப் பற்று

23. கீழ்க்கண்ட சொத்துக்களில் எளிதாக ரொக்கமாக்கக் கூடியவை _________.

அ. நடப்பு சொத்து ஆ. நீர்மை சொத்து இ. நிலையான சொத்து

24. ரொக்கத்திட்டப் பட்டியல் வெளிப்படுத்துவது __________.

அ. பணம் ஆ. அலகுகளின் எண்ணிக்கை

இ. பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை

25. சாதாரண இலாபத்தைவிட சராசரி இலாப மிகுதிக்கு ___________ என்று பெயர்.

அ. நற்பெயர் ஆ. சராசரி இலாபம் இ. உயர் இலாப முறை

26. நிலைமுதல் முறையில், இலாபம் __________ கணக்குக்கு மாற்றப்படுகிறது.

அ. நடப்பு ஆ. எடுப்பு இ. முதல்

27. ____________ முறையில், புதிய கூட்டாளி, அவருடைய பங்கு அளவிற்கு ரொக்கம் நற்பெயர் மதிப்பில் கொண்டு வர வேண்டும்.

அ. முனைம முறை ஆ. மறுமதிப்பீட்டு முறை

இ. நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு முறை

28. அழைப்பு நிலுவை, இருப்பு நிலைக் குறிப்பில் ___________.

அ. அழைத்த முதலில் இருந்து கழித்து காண்பிக்க வேண்டும்.

ஆ. செலுத்தப்பட்ட முதலுடன் கூட்டி காண்பிக்க வேண்டும்.

இ. வெளியிட்ட முதலுடன் கூட்டி காண்பிக்க வேண்டும்.

29. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்புச் செய்யும் போது அந்நிறுமத்தின் பங்கு முதல் __________.

அ. அதே நிலையில் இருக்கும் ஆ. குறையும் இ. அதிகரிக்கும்

30. இருப்புநிலைக் குறிப்பில் முதலினக் காப்பு __________ பக்கம் தோன்றும்.

அ. சொத்துக்கள் ஆ. பொறுப்புகள் இ. இரண்டும்

பிரிவு ஆ

**(10 x 5 = 50)**

i ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்

ii. அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன.

iii. கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளி.

31. சரிக்கட்டுப் பதிவு என்றால் என்ன?

32. முழுமைப்பெறா இரட்டைப் பதிவின் குறைபாடுகள் ஏதேனும் இரண்டினை எழுதுக.

33. ஆண்டுத் தொகை தேய்மான முறை என்றால் என்ன?

34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் நன்மைகள் யாவை?

35. ரொக்கத் திட்டப்பட்டியல் - குறிப்பு வரைக.

36. நிலை முதலுக்கும், மாறுபடும் முதலுக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.

37. பங்கு ஒறுப்பிழப்பு என்றால் என்ன?

38. கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்கு சரிக்கட்டுப் பதிவுகளும், மாற்றுப் பதிவுகளும் தருக. இயந்திரத்தின் மீது தேய்மானம் ரூ. 5,000.

39. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து, மொத்த விற்பனையைக் கண்டுபிடி.

| | ரூ. |
|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 |
| கடனாளியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,60,000 |
| அளித்த தள்ளுபடி | 4,000 |
| உள் திருப்பம் | 10,000 |
| இறுதி கடனாளிகள் | 1,50,000 |

ரொக்க விற்பனை ரூ. 76,000.

40. செல்வி & கோ ரூ. 50,000 மதிப்புள்ள சொத்தை வாங்கியது. அந்நிறுமம் நேர்க்கோட்டு முறையில் தேய்மானம் அனுமதித்தது. அச்சொத்தின் வாழ்நாள் 10 வருடம். அதன் எறி மதிப்பு ரூ. 5000 எனில், தேய்மானம் விகிதம் யாது?

41. கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து புற, அகப்பொறுப்பு விகிதம் கண்டுபிடிக்க :

| | ரூ. |
|---|---|
| சாதாரண பங்கு முதல் | 4,00,000 |
| பொதுக்காப்பு | 2,00,000 |
| நீண்டகாலக் கடன் | 1,00,000 |
| கடனீட்டுப் பத்திரம் | 2,00,000 |

42. J, K எனும் கூட்டாளிகள் முறையே 3:2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். J என்பவர் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் ரூ.5,000 திரும்ப எடுத்துள்ளார். K என்பவர் ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் ரூ. 10,000 திரும்ப எடுத்துள்ளார். 31. 3. 2005 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கு அவர்களின் எடுப்புகள் மீதான வட்டியை ஆண்டுக்கு 10% வீதம் கணக்கிடுக.

43. பானு, கலா ஆகிய இருவர் 4:3 என்ற இலாப விகிதத்தில் கூட்டாளிகளாக உள்ளனர். பிரியா என்பவரை 3/7 இலாபப் பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர். அவ்விகிதத்தை 2/7 பங்கு பானுவிடமும், 1/7 பங்கு கலாவிடமும் பெறப்பட்டது. புதிய விகிதம், தியாக விகிதம் கண்டுபிடிக்க.

44. Z லிமிடெட் ஒன்று ரூ.10 முகமதிப்புள்ள 300 பங்குகளை இறுதி அழைப்புத் தொகை ஒரு பங்குக்கு ரூ.4 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது.

ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் 250 பங்குகள் மட்டும் ரூ.2000 க்கு மறு வெளியீடு செய்யப்பட்டது. தகுந்த குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

## பிரிவு இ **(5 x 12 = 60)**

- **i.** ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்
- **ii.** அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.
- **iii.** 45 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.
- **iv.** கோட்பாடு சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

45. (அ) 31. 03. 2002 அன்றைய இருப்பாய்வின் படி பற்பல கடனாளிகள் ரூ.1,25,000 வாராக் கடன் ரூ.8,000.

சரிக்கட்டுதல்கள் :

1. ரூ. 5,000 வாராக்கடன் போக்கெழுதுக.
2. கடனாளிகள் மீது 5% வாரா ஐயக் கடன் ஒதுக்கு உருவாக்குக.
3. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப் பதிவுகள் தந்து, இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக.

(அல்லது)

(ஆ) திரு. சுகன் என்பவர் தனது ஏடுகளை முழுமைப்பெறா இரட்டைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். அவர் ரூ.3,00,000 முதலுடன் 1. 4. 02 ந் தேதி வியாபாரத்தை தொடங்கினார் மற்றும் 31. 3. 03 ந் தேதி அன்று அவருடைய நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கையில் ரொக்கம் | 8,000 | கொடுபடாச் செலவுகள் | 8,000 |
| கடனீந்தோர் | 50,000 | பொறிவகை | 2,00,000 |
| வங்கி இருப்பு | 20,000 | கடனாளிகள் | 1,50,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 10,000 | சரக்கிருப்பு | 1,50,000 |
| அறைகலன் | 40,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 15,000 |

நிதியாண்டின் இடையில் ரூ.10,000 கூடுதல் முதல் இட்டார். மற்றும் அவர் ரூ.5,000 தனது சொந்தப் பயனுக்கு எடுத்துக்கொண்டார்.

2002 - 03 ம் ஆண்டிற்கான இலாப நட்டத்தைக் கண்டுபிடிக்க.

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

47. ரொக்கத் திட்டப் பட்டியலின் தன்மைகள் மற்றும் நன்மைகளை விளக்கு.

48. கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாதபோது பின்பற்ற வேண்டிய கணக்குப் பதிவியல் விதிகளை விளக்குக.

49. 1. 4. 01 அன்று ரூ.80,000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கப்பட்டது. 1. 10. 02 அன்று ரூ.48,000 மதிப்புள்ள மற்றொரு இயந்திரம் வாங்கப்பட்டது. 30. 9. 03 அன்று முதல் இயந்திரத்தை ரூ.48,000 மதிப்பிற்கு விற்கப்பட்டது. நேர்க்கோட்டு முறையில், ஆண்டுக்கு 10% தேய்மானம் நீக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 31 ந் தேதி கணக்கும் முடிக்கப்படும் எனக் கொண்டு மூன்று ஆண்டுகளுக்கு இயந்திரம், தேய்மானக் கணக்குகளைத் தயாரிக்க.

50. கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களிலிருந்து மொத்த இலாப விகிதம். நிகர இலாப விகிதம், இயக்க இலாப விகிதம் ஆகியவற்றை கண்டுபிடிக்க:

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| விற்பனை | 1,00,000 | முதலீடு விற்பனையில் நட்டம் | 800 |
| மொத்த இலாபம் | 30,000 | பங்காதாயம் பெற்றது | 400 |
| நிர்வாகச் செலவு | 1,000 | நிகர இலாபம் | 26,600 |
| விற்பனைச் செலவு | 2,000 | | |

51. ரவி, அருண் ஆகிய இருவர் கூட்டாண்மை வியாபாரத்தில் 3:2 என்ற விகிதத்தில் கூட்டாளிகளாக உள்ளனர். 1. 4. 03 அன்று அவர்களின் முதல் முறையே ரூ. 1,60,000 ம், ரூ. 1,20,000 ம் ஆகும். அவர்களுடைய எடுப்புகள் முறையே ரூ.12,000 ரூ. 8,000 ஆகும். மற்றும் சில விவரங்கள்:

அ) முதல் மீதும், எடுப்பு மீதும் 6% வட்டி அனுமதிக்க.

ஆ) கூட்டாளிகள் இருவருக்கும் ஆண்டுக்கு சம்பளமாக ரூ. 10,000

இ) ரவிக்கு, நிகர இலாபத்தில் அக்கழிவைக் கழிப்பதற்கு முன்னே 10% கழிவு.

31. 3. 04 தேதியில் அவர்களின் நிகர இலாபம் (சரிக்கட்டுகளுக்கு முன்) ரூ.60,000.

இலாப நட்டப் பகிர்வு கணக்கையும், முதல் கணக்கையும் தயாரிக்க.

52. அசோக் லிமிடெட் ஒன்று ரூ.10 முகமதிப்புடைய 3000 பங்குகள் மீது முதல் அழைப்புத் தொகை ரூ.3, மற்றும் இறுதி அழைப்புத் தொகை மீது 2ம் செலுத்தத் தவறியதால், அவை ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன.

ஒறுப்பிழப்பு செய்த பங்குகளில் 2000 பங்குகள் மட்டும் ரூ. 7 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன.

தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளும் ஒறுப்பிழப்பு கணக்குக்கும், முதலினக் கணக்குக்கும் பேரேட்டு கணக்குகளைத் தயாரிக்க.

பிரிவு ஈ **(3 x 20 = 60)**

**i.** ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்

**ii.** அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் உடையன.

**iii.** 53 வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.

53. (அ) X என்பவர் முழுமைப்பெறா இரட்டைப் பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து 31. 3.04 ந் தேதிய வியாபார இலாப நட்டக் கணக்கும், இருப்பு நிலைக் குறிப்பும் தயாரிக்க:

| | 1. 4. 2003 | 31. 3. 2004 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| சரக்கிருப்பு | 5,00,000 | 2,50,000 |
| பற்பல கடனாளிகள் | 12,50,000 | 17,50,000 |
| அறைகலன் | 50,000 | 50,000 |
| ரொக்கம் | 1,25,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 7,50,000 | 8,75,000 |

மற்ற விவரங்கள்:

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| பெற்ற தள்ளுபடி | 75,000 | அளித்த தள்ளுபடி | 50,000 |
| பற்பலச் செலவுகள் | 1,50,000 | கடனீந்தோருக்கு செலுத்தியது | 22,50,000 |
| கடனாளியிடமிருந்து பெற்ற | | எடுப்பு | 2,00,000 |
| ரொக்கம் | 26,75,000 | கொள்முதல் திருப்பம் | 25,000 |

அறைகலன் மீது 5% தேய்மானம் அனுமதிக்க.

(அல்லது)

(ஆ) A, B ஆகிய இருவர் 3: 2 என்ற விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கூட்டாண்மைத் தொழில் செய்து வந்தனர். அவர்கள் C என்பவரை 1/3 பங்கிற்கு, 1. 4. 2000 அன்று கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் சேர்த்துக் கொண்டனர்.

அ) C ரூ.25,000 முதல் கொண்டு வரவேண்டும்.

ஆ) நற்பெயர் ரூ.26,000 என மதிப்பிடப்பட்டது.

இ) நிலம், கட்டடம் மீது 40% மதிப்பேற்றம் செய்தல்.

ஈ) பொறி, இயந்திரம் மீது 10% தேய்மானம் அனுமதிக்க.

உ) வாரா ஐயக்கடன் ரூ. 800 உயர்த்துக.

ஊ) கடனீந்தோரில் ரூ.1,000 போக்கெழுதுக.

1. 4. 2000ந் தேதியில் இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 29,000 | நற்பெயர் | 10,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 | ரொக்கம் | 9,000 |
| முதல்: | | நிலம், கட்டடம் | 25,000 |
| A ரூ. 50,000 | | பொறி, இயந்திரம் | 30,000 |
| B ரூ. 35,000 | 85,000 | சரக்கிருப்பு | 15,000 |
| | | கடனாளிகள் ரூ. 20,000 | |
| பொதுக்காப்பு | 16,000 | கழிக்க: வாரா ஐயக்கடன் | |
| | | ஒதுக்கு ரூ. 1,000 | 19,000 |
| | | இலாப நட்டக் கணக்கு | 28,000 |
| | 1,36,000 | | 1,36,000 |

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, முதல் கணக்கு, மறுமதிப்பீட்டு கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பையும் தயாரிக்க.

54. கீழ்க்கண்ட இருப்பாய்விலிருந்து 31. 3. 02 ந் தேதிய இறுதிக் கணக்குகளைத் தயாரிக்க.

31. 3. 02 ம் ஆண்டின் இருப்பாய்வு

| | பற்று ரூ. | | வரவு ரூ. |
|---|---|---|---|
| அறைகலன் | 30,000 | முதல் | 2,00,000 |
| ரொக்கம் | 8,000 | கழிவு | 14,000 |
| தொடக்கச் சரக்கு | 1,00,000 | விற்பனை | 6,00,000 |
| கொள்முதல் | 3,20,000 | கடனீந்தோர் | 1,00,000 |
| முதலீடுகள் (10%) | 20,000 | வட்டி | 1,500 |
| எடுப்பு | 60,000 | | |
| வாராக்கடன் | 12,000 | | |
| சம்பளம் | 60,000 | | |
| உள்தூக்குக் கூலி | 20,000 | | |
| காப்பீட்டு முனைமம் | 12,000 | | |
| வாடகை | 26,000 | | |
| கடனாளிகள் | 1,80,000 | | |
| விளம்பரம் | 40,000 | | |
| பொதுச் செலவு | 27,500 | | |
| | 9,15,500 | | 9,15,500 |

சரிகட்டுதல்கள்:

1. இறுதிச் சரக்கு ரூ.80,000.
2. முதலீட்டின் மீதான கூடியுள்ள வட்டி ரூ. 500.
3. முன்கூட்டிப் பெற்ற கழிவு ரூ. 4,000.
4. அறைகலன் மீது 5% தேய்மானம் அனுமதிக்க.
5. முதல் மீது வட்டி 6% கணக்கிடுக.

55. பின்வரும் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து கணக்கிடுக.

1. நடப்பு விகிதம்
2. நீர்மை விகிதம்
3. புற-அகப் பொறுப்புகள் விகிதம்
4. உரிமையாளர் விகிதம்

XYZ Ltd. ன் 2004 மார்ச் 31ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 40,000 | நற்பெயர் | 24,000 |
| காப்புகள் | 20,000 | நிலைச் சொத்து | 56,000 |
| கடன்கள் | 32,000 | சரக்கிருப்பு | 16,000 |
| கடனீந்தோர் | 20,000 | கடனாளிகள் | 8,000 |
| வங்கி மேல்வரைப் பற்று | 8,000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 4,000 |
| | | ரொக்கம் | 12,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

56. பின்வரும் விவரங்களைக் கொண்டு ஜூன், ஜூலை, ஆகஸ்டு 2004, மாதங்களுக்கான ரொக்கத்திட்டப் பட்டியலைத் தயாரிக்க.

1. ஜூன் மாதத்திய தொடக்க கையிருப்பு ரொக்கம் ரூ.7,000.
2. ரொக்கம் விற்பனை முறையே : ஜூன் ரூ.20,000, ஜூலை ரூ.30,000 மற்றும் ஆகஸ்டு ரூ. 40,000 ஆகும்.
3. ஒவ்வொரு மாதத்திலும் செலுத்த வேண்டிய கூலி ரூ.6000.
4. ஆகஸ்டு மாதத்தில் பெற வேண்டிய வட்டி ரூ.500.
5. ஜூலையில் அறைகலன்கள் வாங்கியது ரூ.16,000.
6. ரொக்கக் கொள்முதல் முறையே ஜூன் ரூ.10,000, ஜூலை ரூ.9,000 மற்றும் ஆகஸ்டு ரூ.14,000 ஆகும்.

57. A Ltd. 20.000 பங்குகளை ரூ.100 முகமதிப்பு பங்குகளை ரூ.20 முனைமத்தில் வெளியிட்டது. அதனுடைய பணம் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| விண்ணப்பம் மீது | ரூ.25 | முதல் அழைப்பு | ரூ.20 |
| ஒதுக்கீடு (முனைமம் உட்பட) | ரூ.45 | இரண்டாம் அழைப்பு | ரூ.30 |

நிறுமம் எல்லா பங்குகட்கும் விண்ணப்பங்களைப் பெற்றது. இரண்டு அழைப்புகளும் விடுக்கப்பட்டு, எல்லா தொகையும் பெறப்பட்டது.

குறிப்பேட்டு பதிவுகள் தந்து, முக்கியமான பேரேடுகளையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.